உ

T-UN-605

# சேவற் பாட்டு

## அருணகிரிநாதர் வரலாற்றுத் துதி

# தணிகைக் கலிவெண்பா

# அன்னைப் பத்து

## வள்ளி திருமணத் தத்துவம்



தணிகைமணி

**வ. சு. செங்கல்வராய பிள்ளை**

இயற்றியன

* * *

டிசம்பர் 1956.] — [விலை அணா 2.

உ

# சேவற் பாட்டு

—:o:—

## 1

ஆனைமுக வற்கிளைய
வள்ளல் கரச்சேவல்!
அடியர்வினை பொடிபடுத்தி
அருள் சுரக்குஞ் சேவல்!
தேனைவென்றதிருப்புகழ்சொல்
அருணகிரி போற்றுஞ்
செச்சைமுடி யுச்சியொளிர்
தெய்வவுருச் சேவல்!
மானைவென்ற மடநோக்கி
வள்ளியைப்போல் வலிய
மகிழ்ச்சியுடன் [1]கிரிராஜர்
கைப்பிடித்த சேவல்!
ஊனைவளர் அஞ்ஞானம்
உடையவர்கள் காணு
ஒண்பவளச் செஞ்சடிலர்
மைந்தர் திருச்சேவல்.

## 2

சேவலென்றுங் கோழியென்றுந்
தணிகை மலேத் தேவர்
திருக்கரத்து [2]வாரணமே
என்றுமுனேப் போற்றி

ஆவலுடன் காலே நிதம்
நீகூவுந் தோறும்
அப்பமுருகையய என
ஆர்வமுடன் எழுந்தே

தேவரிடர் தீர்த்த குக
ஷண்முகனுர் பாதஞ்
சிந்தனேசெய்நெஞ்சமெனக்
கேனருள மாட்டாய்?

கூவ இருள் ஒழிகின்ற
[3]சூக்ஷுமத்தைக் கண்டேன்
கூறியுனேப் புகழாமல்
இனியிருக்க மாட்டேன்.

## 3

காலே ஆயுதமாகப்
படைத்திடு செஞ் சேவல் !
கர்மவினைக் குன்றிடித்தே
எனக்கருள வேண்டும் ;

நாலேயாம் [4]வேதங்கள்
பாதங்கள் போற்றும்
நம்பர்திரு வடிமறவா
நெஞ்சருள வேண்டும்

தாலேலோ எனப் பாடித்
தாலாட்டும் அறுவர்
தந்தமுலை யுண்டருளும்
மைந்த எனக் கூறி

மாலேயாந் தேவருக்கு
மேலாய வேலோன்
மலரடிக்கே ஆட்செய்யுந்
தொண்டருள வேண்டும்,

## 4

காரணத்தன் காரியத்தன்
சகலமுமே தானுங்
கந்தபிரான் எந்தைபிரான்
திருக்கரத்துச் சேவல் !

[5]வாரணத்து மங்கைமண
வாளர்தணி கேசர்
[6]வாராய் பே தாயெனவே
எனையாள்வா ரோசொல் !

ஆரணத்தின் முடியிலுறை
குருநாதர் செந்தில்
அதிபரவர் அடியேன்முன்
வருநாளு முண்டோ ?

பூரணத்திற் பூரணமாம்
மெய்ப்பொருளைக் காட்டிப்
புலப்படவே எனக்கருளும்
நாளுமுள தோசொல்.

## 5

கொக்கறுகோ கோ [7]வென்றே
உண்மையெடுத் தோதுங்
குக்குடமே[8] ! சிற்சுகமே !
பிறவியிருள் நீங்கிச்

சிக்கறவே மெய்ஞ்ஞான
சூரியனுஞ் சேயோன்
தெரிசனத்தை யான்பெறவே
வரவொருகாற் கூவாய் !

தக்கதறி யாதுன்றன்
தேகருசி கண்டே
தமதுவயிற் றடக்குகின்றார்
மாந்தர்பல ரந்தோ !

பக்குவத்தைக் கண்டோருன்
நாதநிலை கண்டே
பரவிநெஞ்சத் தடக்கியுனைப்
பேரின்பஞ் சார்வார்.

## 6

கோழியென்று பாடியுனைக்
கும்பிட்டேன் கண்டாய்
குமரேசர் தணிகேசர்
என்முன்வரக் கூவாய்!

வாழியென்று வாழ்த்தியுனைப்
போற்றுகின்றேன் கண்டாய்
வள்ளிமலைச் செல்வரவர்
என்முன்வரக் கூவாய்!

காழியன்[9] கைச் சேவலென்றே
துதிக்கின்றேன் கண்டாய்
கதிர்வேலர் மயிலேறி
என்முன்வரக் கூவாய்!

ஏழிசையின் பயனே[10]யென்
றேத்துகின்றேன் கண்டாய்
எங்களுயிர்த் தலைவரவர்
என்முன்வரக் கூவாய்!

## 7

உடுக்கொறித்த[11] உனதுபிர
தாபத்தைக் கூறி
ஓயாது வாயார
உன்புகழைப் பாடேன்!

மடுக்கணொரு யானைக்கு
வந்துதவு மாயோன்
மருமகனார் செங்கரத்தில்
தங்கியொளிர் சேவல்!

தடுக்கவரி தாமிந்த
வினைப்பவமாஞ் சுழியில்
தடுமாறித் தவிக்கின்ற
என்னையுங்கண் பார்த்தே

எடுக்கவுனக் கரிதோசொல்
எந்தைமுரு கேசர்
எழிற்கரத்தில் விளங்குகின்ற
இன்பவுருச் சேவல்!

## 8

அங்கமெலா முருகநவ
நவமான இசையில்
அமைத்தருண கிரியார் சொல்
திருப்புகழை நாளும்

பங்கம[12]கற் றடியார்கள்
இன்பமுடன் கேட்கப்
பாடுசச்சி தாநந்தன்[13]
மனக்கோயி லதன்கண்

துங்கமுடன் பொலிகின்ற
செஞ்சூட்டுச் சேவல்!
சூலமுடன் தண்டேந்தி
நமன்வருங்கா லத்தே

இங்குளன்யான் அஞ்சாதே
எனக்கூறி என்முன்
எங்கள்துரை சாமிதணி
கேசர்வரக் கூவாய்.

—: o :—

**வேலு மயிலும் சேவலும் துணை.**

## அரும்பத விளக்கம்

1. கிரிராஜர் – மலைவேந்தர் – முருகர்.
2. வாரணம் — கோழி.
3. சூக்ஷுமம் இன்னதென்பதைக் ‘கோழிக் கொடி’ என்னுந் தலைப்பின் கீழ்ப் பின்னர் விளக்கப்பட்டுளது
4. ‘பல காலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி, மலரால் வழிபாடு செய் மா மறைக்காடா’ (சம்பந்தர் தேவாரம்).
5. வாரணம் - யானை ; வாரணத்து மங்கை - தேவசேனையம்மை.
6. ‘வாராய் பேதாய் கேளாய்’-திருப். 1045.
7. கொக்கு – மாமரத்தை (சூரனை); அறு – அறுத்த ; கோ — தலைவரே ; கோ — தலைவர்.
8. குக்குடம் – கோழி. இச்செய்யுளின் முதற் பாகத்தின் கருத்து பின்னர் ‘கோழிக் கொடி’ என்னும் தலைப்பின் கீழ் விவரிக்கப்பட்டுளது.
9. காழியன் — சீகாழி ஞான சம்பந்தப் பெருமான்.

10. 'ஏழிசையா யிசைப்பயனுய்' — சுந்தரர் தேவாரம். (ஆரூர்).

11. உடு - நக்ஷத்திரங்கள் ; ஒருமுறை சேவல் ஆர்ப்பரித்து விண்ணிலுள்ள நக்ஷத்திரங்களை எல்லாம் பொரி கொறிப்பது போலக் கொறித்ததாக ஒரு சரித்திரம் உண்டு. "வான்மிடை யுடுத்திரள் பொரியிற் கொறிப்ப" — கல்லாடம்.
"தாரகை நெல்லாக் கொறித்து"
—சேவற்பத்து.

12. பங்கம் — பாபம்.

13. திருப்புகழ் சாமி, வள்ளிமலை சாமி என வழங்குஞ் சச்சிதாநந்த சுவாமிகள்.

—:0:—

உ

முருகன் துணை.

# கோழிக் கொடி

—:o:—

கற்றவின்சொற் பைங்கிளியே!
காதலனூர் நந்தணிகைக்

கொற்றவன்கைக் கொண்ட
கொடிகூறாய் — உற்றவிணில்

ஊழியாம் போதும்
உலவா உடுக்கொறித்த

கோழியாங் கொண்ட கொடி.

(திருத்தணிகேசன் தசாங்கம்).

—:o:—

''*கவிரலர் பூத்த
சென்னி வாரணக்
  கொடும்பகை யாகித்
தேவர்மெய் பனிப்புற
  வான்மிடை யுடுத்திரள்
பொரியிற் கொறிப்பப்
  புரிந்த பொருள்நாடித்,
தாமரை பழித்த
  கைம்மருங் கமைத்தோய்.''

(கல்லாடம்).

ஸ்ரீ நீலகண்டப் பெருமானுக்கு இடபக்கொடி, ஸ்ரீ லக்ஷ்மீ காந்தருக்குக் கருடக் கொடி, நமது முருகப்பெருமானுக்குக் கோழிக் கொடி. முருகக் கடவுளின் வேலாயுதத்தின் பெருமையையும், மயில் வாகனத்தின் மகிமையையும் யாவரும் உணர்வர். ''வேலு மயிலுந் துணை'' என்னும் மந்திரமே அவைகளின் சிறப்புக்குச் சான்றும். ஆனல், கோழியின் பெருமை அவ்வளவு பிரசித்தமாக அடியார்களுக்கு வெளிவரவில்லை. ஆறுமுகப் பெருமானது உண்மை அடியார்களது நூல்களை ஆராயும்

*(கவிர் — அலர்) முருக்கம்பூ பூத்தது போன்ற செஞ்சூட்டினை யுடைய சேவல்.

பொழுது அந் நூல்களுள் வேலுக்கும் மயிலுக்கும் எத்துணைச் சிறப்புக் கூறப்பட்டுளதோ அத்துணைச் சிறப்பு கோழிக்குங் கூறப்பட்டுளது என்பது தெளிவாக ஏற்படுகின்றது. மெய்ஞ் ஞானியராம் ஸ்ரீ அருணகிரிநாதர்

'' ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய் ''
—(கந்தர் அநுபூதி).

பக்ஷியெனு முக்ர துரகமும்
...... வடிவேலும்
திக்கது மதிக்கவரு
குக்குடமும் ......
வைத்துயர் திருப்புகழ்
விருப்பமொடு செப்பென
எனக்கருள்கை மறவேனே. — (திருப்).

எனக் கோழியை வேல், மயில் இவைகளோடொப்பச் சிறப்பித்துள்ளார். இதன் உண்மை தெரிந்த பெரியார் ஒருவர் ஐம்பது வருடங்களுக்கு முன் சில விசேட ஸ்தலங்களில் உள்ள முருகருக்கு வெள்ளியிற் கோழிக்கொடி செய்து அதிற் பொற்கோழி அமைத்துச் சமர்ப்பித்தனர். அவ்வாறே தலங்கள் தோறும் அன்பர்கள் கோழிக்கொடி செய்வித்துச் சமர்ப்பிப்பா ராயின் அதனல் வரும் பயன்

அறுமுகப் பெருமான் அறிவரே ஒழிய எம்போலிய ரால் இயம்ப ஒண்ணுது. நிற்க,

விடியற் காலையில் கடவுளைத் தியானம் செய் வது மிக விசேடமான செயல். பெரியோர்க ளெல்லாம்,

"காலை யெழுந்து தொழுவார்
தங்கள் கவலை களைவாய்
கறைக் கண்டா"
—(சுந்தரர் தேவாரம்)

எனவும்,

"காலையி லெழுந்து
னுமமெ மொழிந்து
காதலுமை மைந்த
என ஓதி"
—(திருப்புகழ் 871).

எனவும் – காலைத் தியானத்தை விசேடித்துக் கூறி யிருக்கின்றனரல்லவா ? இதனுண்மையை நமக்குப் புலப்படட உணர்த்துவது கோழியே. அது விடியற் காலையிற் "கொக்கறுகோ" எனக் கூவுவதைத் தினமுங் கேட்கின்ருேம். முருகரின் கொடியாகிய கோழி அவர் பெயரைக் கூறிக் கூவாது வேறு கூவுமோ ? ஆதலின் 'கொக்கறுகோ' என்பதன் பொருள் யாது என ஆராய்வோம். ஆராய்ந்தால்

கொக்கு — (சூரனாகிய) மா மரத்தை, அறு — அறுத்த, கோ — தலைவனே! என நமது கந்த பிரானையே அவ்வொலி குறிக்கின்றது, காலையில் நிதமும் முருகபிரானைக் 'கொக்கறுகோ' எனக் கோழியானது கூவிப் பரவச் சூரியன் உதிப்பது போல முருகபிரானை நாமுங் காலையில் நிதமும் பாடிப் பரவினால் ஞான சூரியனாகிய திருக்கை வேற் பெருமானது திருவருள் கூடி ஆணவமாதி இருள் ஒழியும். இவ்வுண்மையை உணர்த்தவே கோழியைக் கொடியாக எம்பிரான் ஏந்தினர் போலும்.

''கொக்கறுகோ'' என விடியற்
காலைநிதம் நீ கூவிக்
குறிக்குஞ் சூக்ஷிப்
பக்குவத்தை யின்றுணர்ந்தேன்
சேவலே! என் போலப்
பாரு ளீர் நீர்
''கொக்கறுகோ'' என முருகன்
திருநாமங் காலைநிதங்
கூறு வீரேல்
சிக்கறுமே பிறவியிருள்
மெய்ஞ்ஞான பானுஎழுந்
தேர்மின்' என்பாய்!

—:o:—

உ

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

## வரலாற்றுத் துதி

—:o:—

1. அடியார்செய் தவப்பயனுல் நினைத்தமாத்
திரை முத்தி யளிக்குஞ் சீர்த்தி
குடியாக விளங்கருணை நகருதித்துக்
குறிஞ்சிமகிழ் குமர வேளின்
கடியார்பூங் கழற்புணையைக்கொண்டுபவ
ஜலராசி கடந்தன் ஞேன்பால்
*ஒடியாந லுபதேசஞ் செபமாலை
இவைபெற்றே உயர்ந்தோன்யாவன்?

2. பச்சைமயில் வாகனமும் வடிவேலுங்
குக்குடமும் பாடல் தோறும்

*ஒடியா = கெடாத (அழிவிலாத) நல் உபதேசம்.

வைச்சதிருப் புகழ்ப்பாக்கள் பதினாரு
யிரம்பாடி வாது செய்த
விச்சைநிறை வில்லிபுத்தூர்ப் புலவருளம்
மிகநாண வேண்டு வோர்தம்
இச்சை யெலாம் நிறைகந்த ரந்தாதி
எனுநூலை இசைத்தோன் யாவன்?

3. எந்தைதிரு வடிவினொளி நினைந்துநினைந்
துருகியவன் எழிலின் வண்ணம்
கந்தரலங் காரமெனக் கலித்துறையாற்
பாடி,யதைக் கண்டோ ரெல்லாம்
செந்தமிழின் அணியிதுவோ கந்தபிரான்
அணியிதுவோ தெரிகி லேமென்
றந்தமிலா அதிசயத்தை எந்நாளும்
உறச்செய்த அன்பன் யாவன்?

4. பின்னரொரு நாள்சம்பந் தாண்டானென்
பானொருவன் பேச்சைக் கேட்ட
மன்னர்பிர புடதேவ மாராஜர்
உளமாட மயிலின் மீதே
தன்னிக ரிலாக்கந்த வேள்திருக்கை
வேல்விளங்கச் சபையில் வந்து
முன்னருறச் செய்தமகா தவப்புலமை
நிறைசெல்வ முன்னோன் யாவன்?

5\. கிளியுருவிற் பொன்னுலகம் புகுந்துமலர்
கொடுவந்த கீர்த்தி யுற்று
வெளியுருவிற் கலவாது மாதேவி
திருக்கரத்தில் விளங்க நின்று
கிளியுருவில் திகழ்ந்தேநங் கந்தரநு
பூதி சொல்லிக் கேடில் லாத
ஒளியுருவச் சீர்பாத வகுப்பாதி
பாடியே உயர்ந்தோன் யாவன் ?

6\. அவனே எங் குலதெய்வம், அவனே எம்
உயிர்த்துணைவ னாகும்; நாளும்
அவன் கழலே வாழ்த்துவோம், அவனருளே
நாடுவோம், அவன் பாதச்சீர்
நவநவமாய்ப் புகழ்ந்து மகிழ்ந் தாடுவோம்;
பாடுவோம், நாடி நாடித்
தவமுதல்வா! அருணகிரி யப்பா! என்
றழைத்திடுவோம் தவத்தைச்சார்வோம்.

—: 0 :—

இறைவ னடிய ரெவரோ அவர்தங்
குறைவில் புகழே குறிக்கும் - நிறைகுணத்து
விச்சைசெறி விப்பிரனும் வேங்கட ராவ் சொல்வழியே
இச்சரித்தி ரம்பாடி னேம்.

—: 0 :—

உ

திருத்தணிகேசன் துணை.

# திருத்தணிகைக் கலிவெண்பா

—:o:—

சீரோங்கு வேற்றடக்கைச்
சீமானே! தென்றணிகை
ஏரோங்கு கோயி
லிருப்பானே! பேரோங்கு
வள்ளிமலை வாழ்வே!
வயலூர்ப் பெருமானே!
வெள்ளிமலை நாதர்
விழைந்தறியத் - தெள்ளுபொருள்
சொற்ற குருவே!
சுரகுஞ் சரிதழுவு
நற்றவமே! எட்டிகுடி
நாயகமே! — கற்றவர்கள்

கண்டு விழுங்குங்
 கனியே! கடலமுதே!
வண்டுபண் செய்யும்
 மலர்த்தொடையாய்! -அண்டினருக்
கொன்றைத் தருவாய், மற்
 றேரிருவர் பாலுகந்தாய்
அன்றுதொழ *மூவர்க்
 கருள் புரிந்தாய் — நன்றுபுகழ்
சொன்ன ஒரு நால்வர்
 சுவைப்பாட்டி லேயமர்ந்தாய்
பின்னமற நின்ற
 பெருமானே! — என்னை
வருத்துமைவர் வல்லாட்டை
 மாய்த்துமெய்ஞ் ஞானக்
கருத்தர்சே ராறிதெனக்
 காட்டித் — திருத்தியுறத்

*திருத்தணிகையில் வீரட்டேசர் கோயில். விஜயராகவப் பெருமாள் கோயில், பிரமதீர்த்தம் இதற்குச் சான்று.

தக்க நிலைவைப்பாய்
  *சத்த இருடிகளும்
புக்குப் பணியப்
  புகலளித்தாய் — முக்கட்
கரும்பளித்த கண்ணே !
  கவினிறைநற் பண்ணே !
சுரும்பமரும் நீபத்
  தொடையாய் ! — விரும்புவரம்
வேண்ட வெருதுதவு
  வேந்தே! பரங்குன்றில்
வேண்டு மமரர்
  மிக மகிழ — வேண்டிவரு
தேவர் தலைமகனுந்
  தேவேந் திரன் மகளை
மூவர் மகிழ மண
  முன்செய்தாய்! — யாவர்க்கும்

*திருத்தணிகையில் சப்த ருஷிகள் பூசித்தனர்; அந்த இடம் ஏழுசுனை என்று இப்போது வழங்குகின்றது.

தீரதீர சூரைச்
செகுப்பதற்குச் செந்தூரில்
வீரவீர வீராதி
வீரனைத் — தேரமர்ந்த
தேவே! நஞ் செல்வத்
திருவாவி னன்குடியாய்!
சேவேறும் எந்தை
செவிக்கினிய — பாவேறு
மந்திரத்தை ஏரகத்தில்
வாய்விட் டுரைத்தருளுஞ்
சுந்தரத்துச் சோதிச்
சுடர்ப்பிழம்பே! — *சந்தமலை
தோறும்விளை யாடுகுக
சோலைமலை வாழிறைவ!
ஆறுபடை வீட்டி
லமர்ந்தோனே! — நீறுபுனை ந்
தேத்தி நினைப்போர்
இதயத் தமிர்துதவி

..............................................................................

*குன்றுதோருடல்.

தோத்திரமுஞ் சொல்வதற்குச்
சொல்லருளும் — மூர்த்தியே!
ஆறு திருவெழுத்தும்
அன்பின் நிலைகண்டு
கூறுமவர் கண்ணிற்
குடிகொள்வோய்! — ஈறிலாய்!
ஓரெழுத்தி லாறெழுத்தை
ஓதுவித்தாய் என் தலையின்
ஈரெழுத்தை மாற்றாத
தென்னேநீ — நீரெழுத்தாய்;
நீலமலர் கண்டாலுன்
*நீலகிரி யேத்துவேன்;
நீலக் கடல்கண்டால்
நீலநிறக் — கோலமயில்
தன்னை நினைந் தேபணிவேன்
சண்முகா! என் முன்னே
பொன்னனையார் கண்தான்
புலப்பட்டால் — மின்னயில்வேல்

*நீலகிரி — நீலோற்பலகிரி; திருத்தணிகை.

சட்டென்று தோன்றிச்
சரணளிக்கும்; எங்கேனும்
சுட்ட பொரிகாணிற்
சுந்தர! என் — திட்டியிலே
தாரகையெ லாம்பொரியாத்
தான்கொறித்த நின் *சேவல்
நேரெதிரே வந்து
நிலைகாட்டும்; — ஆரமுதே!
சுண்டைக்காய் விற்கின்ற
சோலிக் குறத்திசெலின்
இண்டைக்கே வெட்சிபுனை
எம்மானே! — [1]கண்டைச்சீ
என்றஇனிப் பேகொண்ட
இன்பமொழி யாள்வள்ளி
குன்றி லுறையுங்
குறப்பேதை — என்றனையாள்

---

*தாரகை (நட்சத்திரங்களை) கோழி நெல்லாங் கொறித்ததைக் கல்லாடத்திற் காண்க.

1 கண்டு — கற்கண்டு.

அம்மைபுரி பேரன்பும்
ஆறுமுகத் தப்பாவுன்
செம்மைநிறை பேரருளுந்
தேறுவேன் ; — [1]சும்மை
இடியும் மழையும்
எதிரின் இடையே
துடியாஞ் [2]சசிவல்லி
தோன்றி — அடிமலர்தான்
இந்தா எனத்தந்
தெனக்கபயம் சொல்லிமிக
நந்தா வளங்கள்
நயந்தருளும் ; — எந்தாய்
[3]"முருகன் தனிவேல்
முனிநங் குருவென்
றருள்கொண் டறியார்
அறியும் — தரமோ"

1 சும்மை — ஒலி.

2 சசிவல்லி — தேவசேனை.

3 கந்தரநுபூதிச் செய்யுள்.

முருக முருக
முருக முருகென்
றுருகி உரைப்போர்
உரையென் — னருகில்

உறக்கேட்டால் இவ்வுலகம்
உய்யஓ ரன்பர்
திறப்பாட்டாற் சொற்சந்தஞ்
சேரும் — அறப்பாக்கள்

ஆகுந் திருப்புகழென்
அங்கம் புளகிப்பப்
பாகுங் கசந்திடப்
பண்ணியென் றன் — தேகமெலாம்

இன்பம் எழச்செய்யும்;
ஈசா! இவ் வாறேநான்
அன்பு குறையா
அடிமையாய் — என்புருகி

கந்தா! முருகா!
கருணை கர! குமரா!

மந்தா கினிமைந்த!
வானோர்தஞ் — சிந்தா
குலந்தவிர்த்த கோமானே!
கும்பிடுவார்க் கென்றும்
மலந்தவிர்க்கும் வாழ்வே!
வணங்கார் — பலந்தவிர்க்கும்
பண்ப! திருப்புகழைப்
பாடிப் பணிவோர்தம்
நண்ப! எனத்துதித்தே
நான்மீட்டும் — மண்புகா
வண்ணமெனை யாண்டருள்வாய்
வள்ளால்! தணிகேச!
எண்ணமிஃ தீடேற வே.

—:o:—

உ

திருத்தணிகேசன் துணை.

# அன்னைப் பத்து

—:o:—

1

துணிகை மலையினர் தாரணி மார்பர்
மணிகை யுடையவர் அன்னே என்னும்
மணிகை யுடையவர் வள்ளியை நாடி
வணிகராய் வந்தனர் அன்னே என்னும்.

2

வள்ளி கணவனுர் வானவர் காவலர்
புள்ளி மயிலினர் அன்னே என்னும்
புள்ளி மயிலினர் பூதலத் தேவந்தென்
உள்ளங் கவர்ந்தனர் அன்னே என்னும்.

3

சிந்தைக் குகந்தவர் செங்கோட்டு வேலவர்
கந்தக் குருமணி அன்னே என்னும்
கந்தக் குருமணி காலைத் தொழவினை
பந்தத் தொடரறும் அன்னே என்னும்.

4

கொங்கே நிறைதணிக்குன்றிடை வாழ்பவர்
எங்கே ஒளிக்கின்றார் அன்னே என்னும்
எங்கே ஒளிப்பினும் என்னை மறந்துழி
இங்கே உளனென்பர் அன்னே என்னும்.

5

பண்ணுக் குடையவர் பாட்டுக் குருகுவர்
கண்ணுக் கினியரால் அன்னே என்னும்
கண்ணுக் கினியரென் காட்சியிற் பட்டதும்
உண்ணெக் குருகுவன் அன்னே என்னும்.

6

ஆறு திருமுகம் ஆறு திருப்பதி
ஆறு திருஎழுத் தன்னே என்னும்
ஆறு திருஎழுத் தாலென் வினைத்தொகை
நீறு படும்படும் அன்னே என்னும்.

7

ஆற்றிலே தோன்றிய ஐயர் எனதுள்ளே
தோற்றம் அளித்தனர் அன்னே என்னும்
தோற்றம் அளித்தென்னுள் சோதி சுடர்வதாற்
கூற்றம் கலங்குமால் அன்னே என்னும்.

8

வேடர் மகளையும் வேழ மகளையும்
கூடி மகிழ்வரால் அன்னே என்னும்
கூடி மகிழ்பவர் என்னையும் கூடிட
நாடி வருவரோ அன்னே என்னும்.

## 9

அந்தப் புகழ்சொல் அருண கிரிக்குமுன்
சந்தம் அளித்தவர் அன்னே என்னும்
சந்தம் அளித்தவர் சார்பலாற் சார்பிலே
இந்த உயிரினுக் கன்னே என்னும்.

## 10

அத்தர் அறுமுகத் தானந்தக் கூத்தரென்
சித்தத் திருக்கின்ருர் அன்னே என்னும்
சித்தத் திருந்தெனைச் செந்நெறிக் கேசெல்ல
வைத்துக் களிக்கின்ருர் அன்னே என்னும்.

—: o :—

உ

# வள்ளி திருமணத் தத்துவம்

--: o :—

**வா**ன்முட்டு மலைக்கனிநீ அதனுல் வள்ளி
மலைக்கனியை அடைவதற்கே நாடிச் சென்ருய்
மாதவட்கு மயலளிப்பச் செட்டி யானுய்
மற்றதுதான் உங்கள்குல தருமம்! வள்ளி
மான்குட்டி ஆதலினுல் வேங்கை யாகி
மற்றவளை அகலாது மருங்கே நின்ருய்!
வள்ளி கிழவோ னென்றே காட்டுதற்கு
வள்ளியிடங் கிழவனுய் லீலை செய்தாய்!
"யான்" கொட்கு மறுநீங்கிப் பத்தி செய்வோர்க்
கேவல்செயும் பணியாளன் ஈசன் என்னும்
இன்பநிலை காட்டுதற்கே வள்ளி பாதம்
இறைஞ்சினைநீ! அதனுண்மை இன்றுணர்ந்தேன்
தேன்சொட்டும் கடம்பணியுஞ் சேயே உன்றன்!
திருவிளையாட் டின்பெருமை செப்பற் பாற்ருே!
சிந்திப்போர் நெஞ்சகத்தில் ஊறுந் தேனே!
**திருத்தணிகை** மலைவாழுந் தேவ தேவே!